


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



## THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

மரம் 3    ஜூலை 2003    கனி 8

ஆசிரியர்
B. அர்ஜுனன்

## கிறிஸ்துவின் வசன மாத இதழின் பதினொறாவது மாவட்ட வாசகர் கருத்தரங்கம்

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கத்திற்கு திருவள்ளூர் மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். அனுமதி இலவசம்.

**நோக்கம்** :
- ❑ 1992 முதல் 2002 வரை வெளி வந்த இதழைக் குறித்து ஓர் ஆய்வு
- ❑ இந்த பதினொறாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை
- ❑ எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு

**நாள் : ஜுலை 26-ம் தேதி சனிக்கிழமை, காலை 10.00 மணி**

**இடம் : கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்,**


கிறிஸ்டியன் சிட்டி, (பழைய போஸ்ட் ஆபீஸ்) மீஞ்சூர்-601 203. திருவள்ளூர் மாவட்டம்.

மேலும் விபரமறிய
**The Word of Christ,**
✆ (04543) 263278

*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*
**சகோ. ஜான் நாதன்**
✆ 0411 - 9235238

வாருங்கள்! பங்கு பெறுங்கள்!! அறிந்து கொள்ளுங்கள்!!!

## வசனமாகிய விதையை விதைத்து விடு



எச்சரிப்பின் தொனி கேட்குதே
ஏன் இன்னும் மயக்கம் மானிடா
பாரெல்லாம் நாளும் பகற் கொள்ளை
பாவ அந்தி பெருகிடுதே!
விரிவான காலம் குறுகிடும் முன்
வேதத்தை விரைவாய் விதைத்து விடு!
இராக்காலம் ஒன்று வருகிறது
பகல் வேளை இதுவே பயன்படுத்து
தூயாவி தந்த வேதத்தை
துரிதமாய் நீயும் விதைத்து விடு!

*A. ராபர்ட் கிளைவ்*

FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 3 ஜூலை 2003 கனி 8

ஆசிரியருரை

# சிநேகிதர்
# FRIENDS



உலகத்திலே நமக்கு சிநேகிதர் அவசியம். ஆனால் அந்த சிநேகிதர் எப்படிப்பட்டவராயிருக்க வேண்டும். அந்த உண்மையுள்ள சிநேகிதர் யாராயிருக்க முடியும் என்பதைக் குறித்து நாம் ஆராய வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. பரிசுத்த வேதாகமம் "உலக சிநேகிதம் தேவனுக்கு விரோதமான பகை" (யாக்.4:14) என நமக்கு அறிவுறுத்துகிறது. இன்றைய நாட்களில் அநேகர் உலக சிநேகத்தையே விரும்புகின்றனர். இதற்கு என்ன காரணம் என்று நாம் பார்க்கும் போது, ஒரு மனிதன் உலகத்தாராயிருக்கும் போது உலகம் தன்னுடையதைச் சிநேகிக்கிறது. அவன் அவைகளால் ஈர்க்கப்பட்டு அடிமையாகிறான். "செல்வம் அநேக சிநேகிதரைச் சேர்க்கும்" (நீதி.19 : 4) என்ற சாலமோனின் வாக்கின்படி செல்வவான்கள் அநேக சிநேகிதரை இவ்வுலகத்திலே சேர்க்கிறார்கள். இவ்விதமான சிநேகம் உண்மையாய் சிநேகிப்பவரிடமிருந்து நம்மை பிரித்து வழிவிலகிப் போகச் செய்யும்.

நம்முடைய சிநேகிதர் எப்படிப்பட்டவராயிருக்க வேண்டும்? முதலாவது அவர்கள் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தவரை தொழுது கொள்பவராயிருக்க வேண்டும். யோபுவுக்கு மூன்று சிநேகிதர் இருந்தார்கள் (யோபு 2 : 11) அவர்கள் யோபு ஆராதிக்கிற தேவனை ஆராதிக்கக் கூடியவர்களாய் இருந்தார்கள். ஆனால் இந்த மூன்று சிநேகிதரால் யோபு மிகவும் நெருக்கப்பட்டு "உபாதிக்கப்படுகிறவனுக்கு அவனுடைய சிநேகிதனால் தயை கிடைக்க வேண்டும்; அவனோ சர்வ வல்லவருக்குப் பயப்படாதே போகிறான். என் சகோதரர் காட்டாறு போல மோசம் பண்ணுகிறார்கள். ஆறுகளின் வெள்ளத்தைப் போலக் கடந்து போகிறார்கள் (யோபு 6 : 14, 15) என்று அங்கலாய்க்கிறார். இப்படிப்பட்ட சகோதரர்களை யோபு சிநேகிதர்களாக பெற்றிருந்தும் இவர்களுக்காக ஜெபிக்கத் தவறவில்லை. "யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்த போது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். (யோபு. 42 : 10).

இரண்டாவது, சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிக்க வேண்டும். தாவீதுக்கு அப்படிப்பட்ட சிநேகிதன் ஒருவன் இருந்தான். அவனை நீங்கள் நன்கு அறிவீர்கள். தன் தகப்பனாகிய சவுல் தாவீதை கொல்ல வகை தேடிக் கொண்டிருக்கும் போது "யோனத்தான் தாவீதை மிகவும் சிநேகித்தபடியினால் .... தன் உயிரைச் சிநேகித்தது போல சிநேகித்தான்" (1 சாமு.20 : 17). இதை அறிந்த சவுல் தன் மகன் யோனத்தானை அழைத்து "இரண்டகமும் மாறுபாடுமுள்ளவளின் மகனே, நீ உனக்கு வெட்கமாகவும், உன் தாயின் மானத்திற்கு வெட்கமாகவும், ஈசாயின் மகனைத் தோழனாகத் தெரிந்து கொண்டிருக்கிறதை நான் அறியேனோ? ஈசாயின் மகன் பூமியின் மேல் உயிரோடிருக்கும் நாள் வரையும் நீயானாலும் உன் ராஜ்யபாரமானாலும் நிலைப்படுவதில்லை; இப்பொழுதே அவனை அழைப்பித்து, என்னிடத்தில் கொண்டு வா. அவன் சாக வேண்டும் என்றான்" (1 சாமு 20:30-31). தாவீதை தன் உயிரைப் போல சிநேகித்த யோனத்தானுக்கு தன் தகப்பன் சொன்ன வார்த்தை மனநோவாயிருந்தது. அவனோ தன் தகப்பனாகிய சவுலுடைய கைக்கு தாவீதை தப்புவித்துக் கொண்டு வந்தான். இவர்களுடைய சிநேகிதத்தை சவுலாலும் பிரிக்க முடியாதிருந்தது. "சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்" (நீதி. 17:17) என்ற வசனத்தின்படி மரண பரியந்தமும் யோனத்தான் தாவீதை சிநேகித்தான். மேலும் "சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும் ; சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனும்முண்டு" (நீதி. 18 : 24) என்ற திருவசனத்தின்படியேயும் சிநேகித்தான். இப்படிப்பட்ட சிநேகம் கர்த்தருக்குப் பிரியமானது. உங்களுக்கும் இப்படிப்பட்ட சிநேகிதர் உண்டா?

மூன்றாவது, சிநேகிதன் பொறாமை கொள்ளக்கூடாது. சிலர் நல்ல சிநேகமாக இருப்பார்கள். நாளடைவில் பிரிந்து போவார்கள். அவர்கள் இணைந்து ஆரம்பித்த தொழிலும் முறிந்து போகும். இதற்கு காரணம் பொறாமையே. யாக்கோபின் பிள்ளைகளை அறிவீர்கள். இவர்கள் "பொறாமை கொண்டு யோசேப்பை எகிப்துக்குக் கொண்டு போகும் படியாக விற்றுப் போட்டார்கள்" (அப்.7 : 9) தங்கள் தகப்பன், யோசேப்பை அதிகம் நேசித்ததால் சகோதரர்கள் அவன் மேல் பொறாமை கொண்டனர். இன்றைய நாட்களிலும் அநேக குடும்பங்களில் இதை நாம் பார்க்க முடிகிறது. இயேசு கிறிஸ்து உலகத்தில் உள்ள ஒவ்வொருவரையும் சிநேகித்து இரட்சிக்க வந்தார். ஆனால் அவர்களோ "பொறாமையினாலே அவரை ஒப்புக் கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்தான்" (மத். 27 : 17) என்று வாசிக்கின்றோம். "அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது; ஆதலால் ... களியாட்டும் வெறியும், வேசித்தனமும், காமவிகாரமும், வாக்குவாதமும், பொறாமையும், உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக் கடவோம்."(ரோ.12 : 10-13) என்ற வசனத்தின்படி சீராய் நடந்து கிறிஸ்துவின் சிநேகிதர்களாய் விளங்குவோம்.

உண்மையுள்ள சிநேகிதர் யார்? "என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப்பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும்படிக்கும், அவர்களை நீதியின் வழியிலும், நியாய பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன்" (நீதி. 8 : 20, 21). தேவன் நம்முடைய உண்மையுள்ள சிநேகிதராக என்றும் விளங்குகிறார். நாம் அவரை சிநேகிக்கும் போது மெய்ப்பொருளைச் சுதந்தரித்துக் கொள்வோம். இந்த பொய்யான உலகத்திலும், பொய்யான சிநேகத்திலும் வாழ்கின்ற நாம் அவைகளை களைந்து மெய்ப்பொருளை சுதந்தரித்துக் கொள்ள மெய்யான சிநேகிதரான தேவனையும் அவர் அனுப்பின வராகிய இயேசு கிறிஸ்துவையும் சிநேகிப்போம். அவர் நம்முடைய தேவைகளை சந்தித்து நீதியிலும், நியாயத்திலும் நடத்துகிறார். "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான். அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்" (யோவா. 10 : 9). இயேசுகிறிஸ்து பரலோகத்தின் வாசலாகவும், வழியாகவும் இருக்கிறார். அவராலேயன்றி ஒருவரும் பிதாவை (தேவனை) காண முடியாது. அவர் ஆண்டவராயிருந்தும் தம்முடைய சீஷர்களைப் பார்த்து "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறிய மாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" (யோவான் 15 : 15) என்றார்.

மேலும் "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை" (யோவா.15 : 13) என்ற அவருடைய வசனத்தின்படியே தம்மை சிநேகிக்கிறவர்களுக்காக தமது ஜீவனையே சிலுவையில் ஒப்புக் கொடுத்தார். இந்தவிதமான அன்பை நாம் ஒருவரிடத்திலும் காண முடியாது. தேவன் மோசேக்கு கொடுத்த கட்டளைகள் யாவையும் உபதேசிக்கவும், அதன்படி நடக்கவும், அதன்படி செய்யவும், இஸ்ரவேலருக்கு கருத்தாய் போதித்தான். அவர் தந்த மாதிரியின்படியே ஆசரிப்புக் கூடாரத்தையும் எழுப்பினான். "ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவது போல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார் (யாத்.33 : 11). அதைப் போல நம் ஆண்டவரும் தம்முடைய சீஷர்களோடு முகமுகமாய்ப் பேசி "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" (யோவா.15 : 14) என்றார். அந்தப் படியே சீஷர்கள் நிலைத்திருந்து எருசலேம் துவக்கி சுவிசேஷத்தை உலகமெங்கும் பிரசித்தப்படுத்தினார்கள். இன்று நீங்களும் நானும் சீஷர்களிடத்திலே ஆண்டவர் ஒப்புவித்த அந்த புதிய உபதேச சட்டத்திற்கு கீழ்படிந்து அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணு தலிலும் உறுதியாய் தரித்திருந்தால் நாமும் அவருடைய சிநேகிதர்களாயிருப்போம்.

யோபு தன் சிநேகிதர்களுக்காக வேண்டுதல் செய்த போது அவர்களுடைய மீறுதல்களை கர்த்தர் மன்னித்தார். அதைப் போல ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காக வேண்டுதல் செய்யக் கூடியவராயிருக்கிறார். "நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே" (யோவா. 17 : 9) மேலும் "நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." (1 யோவா. 2: 1) என்று யோவான் குறிப்பிடுகிறார். இப்பேர்ப்பட்ட சிநேகிதர் நமக்கு இருக்கும் போது நாம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. அவர் நமக்காக பரிந்து பேசுகிறவரும், ஒருவரையும் புறம்பே தள்ளாத நேசருமாயிருக்கிறார்.

**ஒருவரிப்பாடம் 28 ன் விடைகள்**

**பகுதி 2 : 1.C, 2.B, 3.A, 4.C, 5.A, 6.C, 7.C**

இச்செய்தியை வாசிக்கின்ற அன்பான சகோதரனே, சகோதரியே இந்த மெய்யான தேவனையும் அவர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் விசுவாசித்து உங்களை சிநேகித்து உங்களுக்காக தமது ஜீவனையே ஒப்புக் கொடுத்த இயேசுவையும் அவருடைய நித்திய கட்டளைகளையும் பற்றிக் கொள்ளுங்கள். "என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்" (நீதி.8:17) என்கிறார். கர்த்தர் தாமே உங்கள் சிநேகத்தை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

## தெரிந்து கொள்ளுங்கள்

### சவக்கடல்

K.R.K. ரவி ஆசீர்

யோர்தான் நதிக்கு தெற்கே சவக்கடல் அமைந்துள்ளது. இது சுமார் 80 கி.மீ. நீளம் 16 கி.மீ. அகலமுள்ளது. யோர்தான் நதி இதில் பாய்ந்தாலும் அந்த நீர் வெளியே எங்கும் போவதில்லை. எனவே இது சவக்கடல் என அழைக்கப்படுகிறது. இது கடல் மட்டத்திற்கு கீழே 1300 அடி தாழ்வாக உள்ளது. உலகிலேயே தாழ்வான பகுதி இது தான். இதன் நீர் கடல் நீரைப் போல பத்து மடங்கு உப்புச் சத்துள்ளது. இதன் நீர் கடல் நீரைப் போல ஐந்து மடங்கு அடர்த்தியுள்ளது. இதில் யாரும் மூழ்க முடியாது. சோடியம், குளோரின், சல்பர், பொட்டாசியம், கால்சியம், மக்னீசியம், ஆகிய தாது உப்புக்கள் இதில் அதிகம் கிடைப்பதால் இஸ்ரேல் நாட்டுக்கு இது மிகவும் லாபகரமான கடலாயிருக்கிறது.



# சாத்தானின் பொய்கள்

# Satan's Lies

- J.C. Choate



வேதாகமம் சாத்தான் அல்லது பிசாசைப் பற்றி பல இடங்களில் கூறுகிறது. இயேசு தம்முடைய நாளைக் குறித்து சிலரிடம் பேசுகையில், "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற் கொண்டு மனுஷகொலை பாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்தில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்" (யோவா. 8:44) என்றார். பேதுரு நம்மை எச்சரிக்கிறார், "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளி யாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான்" (1 பேது. 5:8). இவைகளோடு இன்னும் அநேக வசனங்களைக் கூறலாம், ஆனால் சாத்தான் என்பவன் யார், அவன் உங்களோடும், என்னோடும் தேவனுடைய அனைத்து சிருஷ்டிகளோடும் எதைச் செய்யும்படி விரும்புகிறான் என்பதைக் குறித்து நீங்கள் அறிந்துக் கொள்ள வேண்டும்.

சாத்தான் பொய்களுக்குப் பிதாவாயிருக்கின்றபடியினால், நாம் சிலவற்றைக் குறித்து ஜாக்கிரதையாய் இருக்க வேண்டியது அவசியம்.

1. சாத்தான், மனிதர்களும், பூமியில் வாழ்கின்ற சகலமும் பரிணாமத்தின் அடிப்படையில் உண்டானவை என்று நம்மை நம்பச் செய்யலாம். சில விஞ்ஞானிகள், பூமியானது பல கோடி வருடங்களுக்குமுன் உண்டாக்கப்பட்டது என்றும், இப்பிரபஞ்சமும் உயிருள்ள அனைத்தும் "பலத்த சத்தத்துடன் ஏற்பட்ட சிதறினால் ஏற்பட்டது என்றும், மனிதனுக்கு அவன் இப்போது இருக்கிற முன்னேற்றத்திற்கு வர நீண்ட காலம் எடுத்துக் கொண்டது என்றும் நம்மிடம் கூறுகின்றனர். குறிப்பாக நம்முடைய இளங்குழந்தைகள் பள்ளியிலும், செய்தித் தொடர்பு சாதனங்கள் மூலமும், தேசீய, மாநில பூங்காக்களிலுள்ள பகட்டான விளம்பரக் காட்சிகள் மூலமும் பரிணாம கொள்கையோடு தொடர் போராட்டத்திற்குள்ளாகியிருக்கின்றனர். உண்மையாகவே இது ஒரு கொள்கை, ஆனால் உண்மை அல்ல, உண்மையைப் போல் கடந்து சென்று விட்டதாயிருக்கிறது".

இந்த கொள்கை, உயிருள்ள சகலமும் உயிரற்றவற்றிலிருந்து உருவான தாக உரிமை கொள்ளுகிறது. உயிருள்ளது முன்பு உயிருடன் வாழ்ந்தவற்றி லிருந்து மட்டுமே உருவாகிறது என்று காண்பிக்கிற எல்லாராலும் அறியப்பட்ட அறிவியலுடன் ஒரு நேரடியான முரண்பட்ட கருத்தாகும். இது மேலும் உயிர் வாழ்கின்ற ஒவ்வொன்றும் நல்ல முன்னேற்ற நிலையில் மேம்படுவது பரிணாம வளர்ச்சியின் மூலமே என உரிமை கொண்டாடுகிறது - அறிவியலால் செய்யக் கூடாத மற்றொன்று, ஏனென்றால் உஷ்ண சக்திக்கும் எந்திரசக்திக்குமுள்ள இயற்பியல் சாஸ்திரப் பிரிவின் இரண்டாவது விதி, பிரபஞ்சமும் மற்ற அனைத்தும் "அழிந்து கொண்டிருக்கிறது" மேலும் இறுதியானதும் தவிர்க்க முடியாததுமான "அக்கினி மரணத்தை" நோக்கி செல்லுகிறது, அவைகள் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கவில்லை.

உண்மையான சத்தியம் என்னவென்றால் பரலோகத்தில் தேவன் இருக்கின்றார் என்பதும் அவரே சகலத்தின் சிருஷ்டிகர் என்பதேயாகும் (ஆதியாகமம் 1-3). பரிணாமம் என்பது சாத்தானுடைய மிகப்பெரிய அப்பட்டமான பொய்களில் ஒன்று.

2. சாத்தான் நம்மை, இயேசு ஒரு சாதாரண மனிதன் தான் என நம்பச் செய்ய முயற்சிக்கிறான். இயேசு மாமிச சரீரத்தைக் கொண்டிருந்தார், மனிதத் தன்மையுள்ள ஒரு தாய்க்குப் பிறந்தவராயிருந்தார். ஆனால் ஒரு மனிதத் தன்மையுள்ள தகப்பனுக்கு அல்ல. உண்மையாகவே பரிசுத்த ஆவி, கன்னி மரியாளின் மேல் நிழலிட்டதின் மூலம் அவளுக்குப் பிறந்த அவர் தேவனுடைய குமாரனாயிருந்தார் (மத்தேயு 1). இயேசு பாவமில்லாதவராய் மனிதர் மத்தியில் வாழ்ந்து, உலகத்தினுடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்தப்பின், ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் ஆளுகை செய்யும்படி கல்லறையிலிருந்து எழுந்து வானத்திலே பிதாவினிடத்திற்கு திரும்பிப் போனார் (1 கொரிந்தியர் 15 : 1-4 ; 1 தீமோத்தேயு 6 : 15). அவர் இன்று மட்டும் ஜீவிக்கிறவராயில்லை ஆனால் அவர் தம்மோடும், பிதாவோடும் என்றென்றைக்கும் வாழ்ந்திருக்கும்படி தம்முடைய ஜனங்களை பரலோகத்திற்கு எடுத்துச் செல்ல மீண்டும் வருகிறவராயிருக்கிறார் (யோவா. 14 : 1-3).

3. சாத்தான் கூறுகிற மற்றொரு பொய், ஒருவன் ஞானஸ்நானம் பெறாமல் இரட்சிக்கப்பட முடியும் என்பதாகும். ஒரு சடங்காசாரத்தைக் காட்டிலும் சிறிதாகக் காணப்படும் ஒரு விதி அல்லது சட்டத்தை அவன் ஏன் உடைக்க விரும்புகிறான்? பதில் மிக எளிதானது. ஞானஸ்நானம் முக்கிய மானதல்ல என்று ஜனங்களை நம்பச் செய்யாவானானால், அந்தப் பொய்யின் மூலம் அவர்களுக்கு இரட்சிப்பின் கதவை அடைக்க முடியும். எப்படி? ஏனென்றால் இரட்சிக்கப்பட ஒருவன் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று இயேசு கூறினார் (மாற்கு 16 : 16) ஜனங்கள் ஞானஸ்நானம்

பெற மறுப்பார்களேயானால் யோவான் 3 : 5ல் கூறப்பட்ட "புதிய பிறப்பினை" அடைய மாட்டார்கள், ஆனபடியினால் கர்த்தர் அவர்களை தம்முடைய குடும்பத்தில் சேர்த்துக் கொள்ள இயலாது. "மறுபடியும் பிறந்து" இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களை கிறிஸ்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்கிறபடியினால் (அப்போஸ்தலர் 2:47), ஞானஸ்நானத்தைப் புறக் கணித்தவர்கள் நித்திய இரட்சிப்பைப் பெற முடியாது (எபேசியர் 5:23). சாத்தான், ஞானஸ்நானம் முக்கியமல்ல என்று கூறுகிறான், மேலும் இந்த பொய்யின் மூலம் பல லட்சம் மக்கள் நித்தியத்தை இழக்கக் காரணமாயிருக்கிறான்.

4. சாத்தானின் இன்னொரு பொய், சபை முக்கியமானதல்ல, எந்த சபையின் அங்கத்தினராக இல்லாமலிருந்து கொண்டே ஒருவன் இரட்சிக்கப்பட முடியும். மேலும் பரலோகத்திற்குச் செல்ல முடியும், ஏனென்றால் அநேக சபைகள் உண்டு என சாத்தானின் பொய்கள் அநேகமாயிருக்கிறது. சபை முக்கியமானதாக இல்லாவிட்டால், கிறிஸ்து ஏன் அதைக் கட்டுவதாக வாக்களித்தார், மேலும் ஏன் அவர் தம்முடைய இரத்தத்தை சிந்தி அதை வாங்கினார்? (மத்தேயு 16 : 18 ; அப்போஸ்தலர் 20 : 28). நிச்சயமாகவே சபை முக்கியமானது. பரலோகத்திற்குச் செல்ல ஒருவன் அந்த சபையில் கண்டிப்பாக அங்கத்தினராக இருக்க வேண்டியது மிக முக்கியம். சபையானது இரட்சகர் அல்ல என்பது உண்மை, ஆனால் கிறிஸ்து திரும்பவும் வருவதாக வாக்களித்துச் சென்ற சரீரமாகிய சபையில் நாம் அங்கமாக இல்லாவிட்டால் நித்திய இரட்சிப்பை நாம் பெற முடியாது (எபேசியர் 5 : 27 ; 1 கொரிந்தியர் 15 : 24).

பிசாசு மனுஷரிடம் சொல்லுகிறதான நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்காக மற்ற பொய்கள் உண்டு, மேலும் சாத்தான் ஒவ்வொன்றைக் குறித்தும் பொய் சொல்லுகிறான் என்பது ஆச்சரியமான ஒன்றல்ல ; எத்தனை ஜனங்கள் இந்த பொய்களை விசுவாசிக்கிறார்கள் என்பதே வியப்பிற்குரியதாயிருக்கிறது. அரசியல் பொய்களைப் போலவே சமயப்பொய்களும் உண்மையாக இருக்கிறது, பொய்களே தொழிலாகவும், அநேக பொய்களைத் திரும்பத் திரும்பக் கூறி அதிகமான ஜனங்கள் அதை விசுவாசிக்கின்றனர் என்றும் நான் நினைக்கிறேன். கள்ளப் போதகர்களும், கள்ளப் பிரசங்கியார்களும், மற்றும் பொதுவாக அவர்களைப் பின்பற்றுகிறவர்களும் ஒரே விதமான உபதேசப் பொய்களைத் திரும்பத் திரும்பக் கூறி அவர்கள் தாங்களாகவே அவைகளை விசுவாசிக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

ஜனங்கள் இந்த பொய்களை ஒவ்வொரு முனையிலிருந்தும் கேள்விப் பட்டு, மேலும் அவர்கள் அவைகளை அடிக்கடி கேள்விப்பட்டு வேதாகமத்தின் உண்மையான சத்தியங்கள் பொய்களைப் போல புறக்கணிக்கப்படுகிற பொழுது, தொழுகைக்கு அவர்களுடைய திரும்ப திரும்ப கேள்விபட்ட காரியம் உண்மையைப் போல அவர்களுக்கு தோற்றமளிக்கிறது. பவுல் இதே

காரியத்தைக் குறித்து ரோமர் 1 : 25ல் பேசினார், "தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்". இல்லை, சாத்தானின் சமயசம்பந்தமான பொய்கள் உண்மை யானவை அல்ல. ஜனங்கள் வாழ்நாளெல்லாம் அவைகளைக் கேள்விப்பட்டு அவைகள் உண்மையென்று விசுவாசிக்கின்றபடியினால் அவைகள் உண்மை யாகாது. ஒருநாள், நியாயத்தீர்ப்பிலே, இந்த கள்ள உபதேசங்களும், வாக்குத்தத்தங்களும் சாத்தானுடைய வெளிப்படையான பொய்கள் அவைகளென அம்பலமாகும். அதிகமான பக்தியுள்ள ஜனங்களும், கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்கள் கூட வாழ்நாள் முழுவதும் இப்பேர்பட்ட அனைத்து பொய்களையும் நம்புகிறவர்களாகவும், கருத்தாய் வேதாகமத்தை கற்று உண்மையாகவே கர்த்தர் கூறியுள்ளது என்னவென்று அறிய விரும்பாதவர் களாகவும் இருப்பது எவ்வளவு துயரமான ஒன்று! அவர்கள் சாத்தானுடைய பொய்களின் மேல் தங்களுடைய ஆத்துமாக்களை ஆக்கினைக்குட் படுத்துகின்ற கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பின் போது மட்டும் கற்றுக் கொள்ளுவார்கள் என்பது எப்பேர்பட்ட வேதனையான ஒன்று! இது சந்திப்பதற்குப் பயங்கரமான நிகழ்ச்சியாயிருக்காதா?

என்னுடைய நண்பா, நான் உங்களை சாத்தானுக்கும் அவனுடைய உடனாளிகளுக்கும் செவிசாய்க்காதீர்கள் என துரிதப்படுத்தட்டும். அவர்கள் உங்களுக்கு உண்மையைச் சொல்லமாட்டார்களென்றும் அவர்களுடைய பொய்கள் அழகானதாகவும் தூண்டக்கூடியதாகவும் இருக்குமென உணர்ந்து கொள்ளுங்கள். அவர்கள் அந்த பொய்கள் அனைத்தும் உண்மையான சத்தியங்கள் என்று நம்பச் செய்வதற்கு கூடுமான எல்லாவழிகளையும் பயன்படுத்துவார்கள். சாத்தான் அவனை விசுவாசிக்கும்படிக்கு உங்களை ஆதாயப்படுத்திக் கொள்வானேயென்றால், நீங்கள் இழந்தவர்களாயிருப்பதற்கு அவனே பொறுப்பாளியாவான். ஆனால் மறுபடி யோசனை செய்கையில், நீங்கள் இழந்தவர்களாயிருப்பீர்களென்றால், நீங்கள் தானாகவே முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். ஏனென்றால் கர்த்தர் பிசாசை விசுவாசிக்கக் கூடாதென்றும் மேலும் நம்மை நாமே வஞ்சிக்க இடங்கொடுக்கக் கூடாது என்றும் எச்சரித்திருக்கிறார்.


சத்தியம் என்பது மிக வெளிப்படையானதும் எளிதானதுமாயிருக்கிறது. கர்த்தருடைய வசனத்தை வாசித்து அது கூறுகிறதை ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்களோ அல்லது வேறொருவரோ புதிய ஏற்பாட்டினை புரிந்து கொள்ளக் கூடாதபடிக்கு எந்த காரணமுமில்லை. இயேசுவே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார், அவராலேயன்றி பிதாவினிடத்தில் ஒருவனும் வரான் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள் (யோவா. 14:16). சத்தியம் மட்டுமே நம்மை விடுதலையாக்கும் என்பதையும் நினைத்துக் கொள்ளுங்கள் (யோவா. 8:32).

பெண்கள் பகுதி

# ஆராதிக்க நம்முடைய பிள்ளைகளைப் பயிற்றுவித்தல்

## Training Our Children to Worship

Betty Burton Choate



"போதி" என்ற வார்த்தை வாய்மொழி விளக்கத்தையும், பிரசங்கிப்பதையும், விவேக மான விவாதத்தையும் நம் நினைவிற்கு கொண்டு வருகிறது. "பயிற்றுவி" என்ற வார்த்தை ஒரு காரியத்தைக் கற்றுக் கொள்ளும் வரை அதை பயிற்சி செய்வதன் அவசியத்தைக் கொண்டு வருகிறது.

நாம் ஆராதனையில் பயபக்தியுடன் கிரகித்துக் கொள்ளும் அனுபவத்தில் நம்முடைய பிள்ளை களை பயிற்றுவிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக் கிறோம். நாம் நம்முடைய வேலையை சிறப்பாய் செய்தால், அவர்களுடைய சுபாவம் ஒரு இனிமையான தேவனோடு தங்கள் வாழ்நாள் முழுவதும் நெருக்கமுடையதாக இருக்கும்; நாம் அவர்களை ஒரு ஜீவனற்ற வடிவில் மட்டும் பயிற்றுவித்தால் நாம் அவர்களுடைய பெரிதான பொக்கிஷத்தை கொள்ளையடிக்கிறவர்களாயிருப்போம்.

ஒரு குறிப்பிட்ட நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும்படிக்கு அம்மை குத்திக் கொள்ளுவது சாத்தியமானது. அடிக்கடி செயலற்ற அம்மைப்பால் சரீரத்தில் இலேசான அரிப்பு அல்லது ஜுரம் போன்ற எதிர்தாக்குதலை ஏற்படுத்தும் என்பது உண்மை. ஆனால் அம்மை குத்திக்கொள்ளுவதும் இலேசான எதிர்தாக்குதலும் உயிருக்கு அந்த வியாதி வராதபடி செய்யும் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகிறது.

அஜாக்கிரதையாக, நம்முடைய குழந்தைகளை அவர்களுக்குள் ஆவிக்குரிய வாழ்வை கொண்டுவர முடியாத கிறிஸ்தவத்தின் ஒரு வெறுமையான அமைப்பிற்கு அவர்களை விற்றுப் போடுகிறவர்களாக ஆவிக்குரிய வகையில் அவர்களுக்கு அம்மை குத்தி விடுவோம். ஒரு வேளை நாம் அவர்களை ஆராதனைக்கு அழைத்துச் செல்லலாம்; ஒருவேளை நாம் சில நேரங்களில் வேதாகமத்தை வாசித்துக் காட்டலாம் ; ஒரு வேளை நாம் நேர நேரத்திற்கு ஒரு முறையான ஜெபத்தை சொல்லிக் கொடுக்கலாம். அதன் விளைவு, அவர்கள் தாங்கள் உண்மையாகவே கிறிஸ்தவத்தை பயிற்சிக்கிறோம் என நினைக்கலாம், ஆனால் அது வாழ்க்கைக்கு ஒரு உள்ளான உந்துதலாயில்லாததினால், அது அவர்களிலே கிரியை செய்வதில்லை. இப்போது அவர்கள் கடமையினின்று விடுபட்டவர்கள். அவர்கள் உண்மையாக வாசிக்க வாஞ்சையில்லாதவர்களாக போதுமான அளவு

வாசிக்கிறார்கள் ; அவர்கள் முறையாக ஜெபத்தினால் இளைப்படைந்து விட்டார்கள். ஏனெனில் அவர்கள் விரும்புகிறதை தேவனிடம் கூற இருதயத்திலிருந்து அவர்கள் வார்த்தைகளைக் கொண்டிருக்கவில்லை ; உருவ வழிபாட்டில் தேவனுடைய பிரசன்னத்திற்குள் செல்ல தங்களுடைய இருதயங்களில் வாஞ்சையில்லாத படியினால், அவர்கள் ஆராதனை முழுவதும் கண்ணயர்ந்து அல்லது விளையாடுகிறார்கள்.

நாம் எவ்வாறு முழு இருதயத்தோடு தேவனை ஆராதிக்க நம்முடைய பிள்ளைகளை பயிற்றுவிப்பது?

1. முதலாவது, அவர்கள் மிக இளமையாக இருக்கின்றபொழுது, நாம் கர்த்தருடைய நாளில் வரவிருக்கிறதான ஆராதனை நேரத்தைக் குறித்து வாரத்தின் நாட்களிலும் இரவில் பேசி, தொழுகை செய்வதினால் ஏற்படக்கூடிய நன்மையின் மேல் உள்ளான மகிழ்ச்சியை நமது முகமலர்ச்சியில் வெளிப்படுத்தி நமது பேச்சில் தெரிவிக்க வேண்டும்.

2. இரண்டாவது, நாம் குடும்ப ஆராதனையை வீட்டில் குறிப்பிட்ட நேரத்தில் ஏற்படுத்தி அவர்களை பயபக்தியுள்ள நடக்கையுடன் எந்த நேரத்திலும் கலந்து கொள்ள பயிற்றுவிக்க வேண்டும்.

3. நாம் பொதுவான ஆராதனைக்கு முன்பாக நம்மை ஆயத்தப்படுத்து கிறோம் என்பதை நமது மாதிரியின் மூலமும் நம்முடைய தெளிவான வார்த்தை களின் மூலமும் போதிக்க வேண்டும். நாம் நம்முடைய மனதையும் சரீரத்தையும் சுத்திகரித்துக் கொண்டு தேவன் மேல் கொண்டுள்ள பயபக்தியை வெளிப்படுத்து கிறதான உடைகளை அணிந்து கொள்ள வேண்டும். நாம் சரீரத்தில் சரியான ஆயத்தத்தோடு இருக்கும் போது, ஆராதிப்பதற்கு இது ஆவிக்குரிய தேவையான ஆயத்தத்தை உருவாக்க எளிதாக இருக்கிறது.

4. ஆராதனையிலே, மீண்டும் நாம் நம்முடைய சொந்த நடக்கையின் மூலம் பயிற்றுவிக்கிறோம். நாம் முழு இருதயத்தோடு பாடினால், நாம் பயபக்தியுடன் கவனித்தால், விசுவாசத்துடன் ஜெபித்தால், தேவனுடைய ஊழியத்தை தாங்க தாராளமாகவும் சுதந்திரமாகவும் கொடுத்தால் - மேலும் இவையெல்லாவற்றைக் குறித்தும் வாரம் முழுவதும் பேசி திட்டமிட்டு அனுதின வாழ்க்கையில் ஒன்றிப் போனது போல விளக்கமளித்தால் - அவர்கள் பொதுவான ஆராதனையில் சிறப்பாய் இருப்பது போல் அனுதின வாழ்வின் ஒரு பகுதியாகவே நம்முடைய பிள்ளைகளுக்கு அது மாறிவிடும்.

5. ஆராதனையிலேயே, நாம் நம்முடைய குழந்தைகளை பாடலில் பங்கு கொள்ளச் செய்ய விரும்பினால், நாம் அவர்களுக்கு ஒரு புத்தகத்தைக் கொடுத்து, பக்கங்களைக் கண்டுபிடிக்க உதவி, மேலும் அவர்கள் பாடலின் வார்த்தைகளைத் தொடர அவர்கள் தாங்களாகவே அவைகளைச் செய்வதற்கு முன்னதாக உதவி செய்வோம்.

6. குழந்தைகள் தங்களுடைய இளமைப் பருவத்திலிருந்தே தங்களுக்கென சொந்தமாக வேதாகமத்தைப் பெற்றிருப்பது அவசியம். அவர்கள் அந்த புத்தகத்தை

சரியாக பராமரிக்கவும், மரியாதையுடனும் அன்புடனும் அதை ஆராதனைக்குத் தவறாமல் தங்களோடு எடுத்துச் செல்லவும் போதிக்கப்பட வேண்டும்.

7. பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் ஆராதனை வேளையில் என்ன செய்கின்றார்கள் என்ற உணர்வுடனிருக்க வேண்டும். நான் 8 மற்றும் 10 வயது குழந்தைகள் திருவிருந்தை நினைவு கூருகிற வேளையில் மீண்டும் மீண்டும் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் இருப்பதை பார்த்திருக்கிறேன் ; நான் அவர்கள் பாடுவதற்கு பதிலாக விளையாடிக் கொண்டும், அவர்கள் ஜெபங்களிலிருந்தும் பாடத்திலிருந்தும் என்ன அறிந்து கொள்ள முடிந்தது என்று விழிப்புடன் ஜாக்கிரதையாய் ஆராய்ந்து பார்ப்பதற்குப் பதிலாக தூங்கிக் கொண்டுமிருப்பதை பார்த்திருக்கிறேன்.

பிள்ளைகள் முதியவர்களை போலிருக்கிறார்கள் : நாம் அறிந்து கொள்ளுவதற்கு முழுத் தகுதியுடையவர்களாய் மாறுவதற்கு முன்னேயும் சாதாரணமாக ஒரு பழக்கத்தை உருவாக்குகிற காரியங்களை அடிக்கடி செய்வதன் மூலமும் நாம் அதிகமான காரியங்களைக் கற்றுக் கொள்கிறோம். இளம் பருவத்தில் பிள்ளைகள் முழுவதும் புரிந்து கொண்டு அர்த்தத்துடன் ஆராதிக்க தங்களுடைய அடித்தள வருடங்களில் ஆராதனையை தூக்கத்திலும், விளையாட்டிலும், பொழுதுபோக்கிலும் கழிக்காதவர்களாய் "வளர்ச்சி" அடையலாம் - அல்லது "புரிந்து கொள்ளக் கூடிய வயது வரும் வரை" வீட்டிலே விட்டு விடலாம். பிள்ளைகளை சரியான வழியில் பயிற்றுவிப்பது நம்முடைய பொறுப்பாகும். அப்போது தான் அவர்கள் பொறுப்புள்ளவர்களாகவும் ஆராதிக்கக்கூடிய வளர்ச்சியுடையவர் களாகவுமிருப்பார்கள்.

- தமிழில் : J. குளோரி அர்ஜுனன்

## மத சார்பற்ற அரசு
## SECULAR GOVERNMENT

இந்திய அரசு எந்த ஒரு தனிப்பட்ட சமயத்தையும் அடிப்படையாகக் கொண்டது அல்ல. அதனால் இது மத சார்பற்ற அரசாக விளங்குகிறது. அரசு எந்த சமயத்தின் கோட்பாடுகள் மற்றும் கருத்துக்களில் தலையிடாது.

இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள், சமணர்கள், பௌத்தர்கள் என்று பல்வேறு சமயத்தவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க உரிமை தரப்பட்டுள்ளது. மக்கள் தங்கள் சமயக் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தவும், பிரச்சாரம் செய்யவும், வளர்க்கவும் உரிமையளிக்கப் பட்டுள்ளது. எனினும் இச்செயல்கள் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைப் பாதிக்காத வகையிலும், பிற சமயத்தவர்களின் உணர்வுகளைப் பாதிக்காத வகையிலும் பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்காத வகையிலும் இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. இது நமது இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகளில் ஒன்று.

# விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே

ரோமர் 14 : 23

1. விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையி ... எபி.11:3
2. விசுவாசத்தினாலே ஆபேல் காயினுடைய பலியிலும் மேன்மை ... எபி.11:4
3. விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு ... எபி.11:5
4. விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் ... எபி.11:7
5. விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப் போகிற ... எபி.11:8
6. விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் ... எபி.11:11
7. விசுவாசத்தினாலே ஈசாக்கு வருங்காரியங்களைக் குறித்து ... எபி.11:20
8. விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பினு ... எபி.11:21
9. விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத். ... எபி.11:22
10. விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது ... எபி.11:24
11. விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த ... எபி.11:29
12. விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் ... எபி.11:30
13. விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் ... எபி.11:31
14. விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள் ... எபி.11:33

**ஆகையால்**

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் ... எபி.11:6

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது ... எபி.11:1

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்...மாற்.16:16

**நீங்கள்**

**விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள்.**


## பொது அறிவுக்களஞ்சியம்

### சர்வதேச தொழிலாளர் நிறுவனம் (ILO)

தலைமையகம் ஜெனிவா. முக்கிய நோக்கங்கள் : உழைப்பாளர் களின் தரத்தை உயர்த்தப் பாடுபடுதல், அவர்களுடைய பொருளாதார, சமூக நலன்களுக்குப் பாடுபடுதல் முதலியன. 1919, ஏப்ரல் 11ல் உருவானது.

ஒரு வழி

# வீட்டுச் சபைகளை ஆரம்பித்தல்
# STARTING HOUSE CHURCHES




## பாடம் 28

## 4. உங்களுடைய கொடுத்தலை ஆரம்பித்தல்
## BEGINNING YOUR GIVING

மற்றவர்களுக்கு உதவும் பொருட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற ஊழியர்களுக்கு உதவும் பொருட்டும் பணம் அல்லது பொருட்களை கொடுத்துதவுவது கிறிஸ்தவத்தின் சிறப்பம்சமாயிருக்கிறது. இது ஒருவன் அல்லது ஒருவள் தேவன் மேலும் மற்றவரின் மேலும் தாங்கள் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தக் கூடிய ஒரு வழியாகும். நாம் நற்கிரியைச் செய்யும் படிக்கு ஒவ்வொரு தருணத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். (கலா. 6 : 10). ஆனபடியினால், கொடுக்கிறவர் களாகிய நாம் நம்மிலிருந்து தியாகபலி செலுத்துவதற்கான தருணம் நேரிடும் போது கொடுப்பதற்கு எப்போதும் ஆயத்தமாயிருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் தனிப்பட்ட தேவைகளுக்கு கிறிஸ்தவர்கள் கொடுத்து உதவியதற்குரிய பல எடுத்துக்காட்டுகள் உள்ளன.

★ 1 கொரிந்தியர் 16 : 1-4 ஒரு குறிப்பிட்ட தேவையைப் பூர்த்தி செய்யும்படிக்கு கிறிஸ்தவர்கள் பணம் கொடுத்ததின் மாதிரியாகும். அவர்கள் யூதேயாவில் பட்டினியால் துன்புற்ற கிறிஸ்தவர்களுக்கு உதவினார்கள்.

★ 2 கொரிந்தியர் 8 : 1- 4 - இது சபையார் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டு மற்றவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு பிரயாசப்பட்டதின் ஒருமாதிரியாகும்.

★ பிலிப்பியர் 4: 10 - 18 இது கிறிஸ்தவர்கள் ஊழிய நோக்கத்திற்காக கொடுத்து உதவினதின் மாதிரியாகும்.

★ அப்போஸ்தலர் 4: 32 - 37 இது கிறிஸ்தவர்கள் தங்கள் பகுதியின் பிராந்திய சபைக்கு கொடுத்து உதவியதின் மாதிரியாகும்.

★ அப்போஸ்தலர் 6 : 1- 7 சபையின் விதவைகளுக்கு கிறிஸ்தவர்கள் பகிர்ந்தளித்தலின் மாதிரியாகும்.

கிறிஸ்தவர்கள் இணைந்து நிறைவேற்றுவதற்கான பல காரியங்கள் உள்ளன. சபையார் ஊழியஞ் செய்யப்படாத பகுதிகளுக்குச் செல்ல ஊழியர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்கள் அனாதைகளையும், விதவைகளையும் பராமரிக்க வேண்டும். (யாக். 1: 27). கிறிஸ்தவர்கள் அங்கத்தினர்களாக அல்லது சபையாக வேதாகமம் வாங்குவதற்கும், வாடகைக்கு எடுக்க அல்லது ஒரு சபைக் கட்டடத்திற்கு வாடகை கொடுக்க இணைந்து கொள்ள வேண்டும். நினைவில் கொள்ள வேண்டிய முக்கியமான காரியம் என்னவென்றால் *கிறிஸ்தவர்கள் உதாரத்துவமாக தானதர்மம் கொடுக்க தீர்மானிக்க வேண்டும், மேலும் அவர்கள் அந்த தானதர்மங்களை உற்சாகமாய் கொடுக்க வேண்டும்.* (2 கொரி. 9 : 6 - 7). ஆனபடியினால் உங்கள் வீட்டில் கூடி வருகிற சபையின் துவக்கத்திலிருந்தே சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்குப் பயன்படுத்தும்படி காணிக்கைகள் கொடுக்கப்படுகிறது.

# 5. உங்களுடைய ஊழியத்தை ஆரம்பித்தல்
# Beginning your Evangelism

கிறிஸ்தவர்களாகிய நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளான உங்களுடைய சுயாதீனத்தில் மற்றவர்கள் உங்களோடு இணைந்துள்ளனர் என்பதை விரும்புகிறவர்களாக இருக்க வேண்டும். இப்படியாக நீங்கள் என்ன அறிந்திருக்கிறீர்கள் என்பதை மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டும். எப்படியாயினும், நீங்கள் போதிக்கும் போதும் பிரசங்கிக்கும் போதும் உங்களுக்கு விரோதமாக பிசாசு போராடுவான். எப்போதும் உங்களை துன்புறுத்துகிறவர்களும் உங்களுக்கு முன் இருப்பார்கள். பின்வரும் பகுதியில் இயேசு என்ன கூறினார் என்று நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

**மத்தேயு 5: 10-12**

*"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே".*

துன்புறுத்தல் மற்றும் பரிகாசம் செய்தல் குறித்து கவலை கொள்ளாமல், நீங்கள் உங்களுடைய சமுதாயத்தில் ஊழியஞ் செய்ய வேண்டும். நாம் ஒவ்வொருவருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென இயேசு கட்டளையிட்டார். (மாற்.16 :15) அவர், நாம் உலகமெங்கும் போய் உபதேசம் பண்ணும்படி போதித்தார். (மத். 28: 19, 22). இதுவே ஆதிக் கிறிஸ்தவர்கள் செய்தவையாகும். " தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" (அப்.5 : 42). இதுவே நீங்கள் செய்ய வேண்டியவையாகும். ஆதிக்கிறிஸ்தவர்கள் எங்கும் திரிந்து தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்தார்கள் (அப்.8 : 4). இதையே நீங்கள் செய்ய வேண்டும்.

பிலிப்பிய மற்றும் தெசலோனிக்கேய சபையார் இருவருடைய வேலையும் வெளியே சென்று ஊழியஞ் செய்ததற்கான ஒரு எடுத்துக் காட்டாயிருந்தது. பிலிப்பிய சபை ஆரம்பிக்கப்பட்ட ஒரு சில வாரங்களிலே ஒரு தடவை உதவி அனுப்பி பிறகு மறுபடியும் மற்ற பகுதிகளில் பிரசங்கித்த ஊழியர்களுக்கு உதவி அனுப்பியது (பிலி.4: 15-17). இதைப் போலவே, தங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்பத்திலிருந்தே தெசலோனிக்கேய சபையார் தேவனுடைய வார்த்தையை தங்களுடைய பகுதியில் மட்டுமல்லாது, எல்லா பகுதியிலும் அனுப்பி வைத்தார்கள் (1 தெச. 1: 5-10). இதையே நீங்கள் செய்ய வேண்டும்.

**தற்சோதனை:-**

1.______1 கொரிந்தியர் 16 : 1-4... க்குக் கொடுத்ததற்கான சபையினுடைய ஒரு மாதிரியாகும்
(A) ஒரு குறிப்பிட்ட தேவைக்கு (B) வாடகை கொடுப்பதற்கு
(C) ஊழியர்களுக்கு

2.______கிறிஸ்தவர்கள் எந்த மனதுடன் தானதர்மம் செய்ய வேண்டும்?
(A) விசுவாசத்தோடே (B) கட்டாயத்தோடே (C) உற்சாகத்தோடே

3.______கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படும் போது என்ன செய்ய வேண்டும்?
(A) புகார் செய்ய வேண்டும் (B) வாதிட வேண்டும் (C) சந்தோஷப்பட வேண்டும்.

4.______எந்த சபை தனது ஆரம்ப நாட்களிலே ஊழியருக்கு உதவியது?
(A) கொரிந்து (B) ரோம (C) பிலிப்பிய

5.______எந்த சபை தன் சொந்த பகுதியில் ஊழியஞ் செய்தது?
(A) லவோதிக்கேயா (B) பெர்கமு (C) தெசலோனிக்கேயர்

ஆம்/இல்லை : மற்றவர்களுக்கு உதவும் பொருட்டு நீங்கள் ஊக்கமாய் கொடுக்கின்றீர்களா?

**வேத வாசிப்பு :** லூக். 10 : 25-37 ; அப். 4 : 32 - 37; 6 : 1-7 ; பிலிப்.4:10-18; 1 தெச.1 : 2-10; 1 யோவா. 3:16-23

**வேத ஆராய்ச்சி :** கொடுத்தல் : மத்.19 : 21; அப்.10 : 34, 35; அப். 20 : 32-35; கலா. 2 : 10 ; 6 : 10 ; எபே. 4 : 28 ; 2 கொரி. 9

If you want English Magazine **"The Bible Teacher"**
Please write to
The Editor
**The Bible Teacher**
Box : 3815. New Delhi - 110 049

சிறுவர் பகுதி

# கானா ஊரிலே இயேசு செய்த இரண்டாம் அற்புதம்

வேதப்பகுதி : யோவான் 4 : 46-54



கானா ஊர் என்றாலே உங்களுக்கு ஞாபகம் வந்து விடும். இங்கு தான் இயேசு தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றினார். இந்த கானா ஊருக்கு ஆண்டவர் மறுபடியும் சென்ற பொழுது, இயேசு வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்ட ராஜாவின் மனுஷன் ஒருவன் அவரிடத்திற்குப் போய் தன் மகன் மரண அவஸ்தையா யிருக்கிறான். அவனைக் குணமாக்க வரவேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டான். அதற்கு அவர் நீங்கள் அடையாளங்களையும், அற்புதங் களையும் காணாவிட்டால் விசுவாசிக்க மாட்டீர்கள் என்றார். அவனோ என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வரவேண்டும் என்று துரிதப்படுத்தினான். இயேசு அவனை நோக்கி நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். அதற்கு அந்த மனுஷன் மாறுதரமாக ஒன்றும் பேசாமல் அப்படியே இயேசுவின் வார்த்தையை நம்பிப் போனான்.

அந்த மனுஷன் போகையில் அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர் கொண்டு வந்து உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று அறிவித்தார்கள். அப்பொழுது அவன் எந்த மணி நேரத்தில் சுகமானான் என்று கேட்டான். அதற்கு அவர்கள் நேற்று ஏழாமணிநேரம் என்றார்கள். இயேசு உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று சொன்ன மணி நேரம் அதுவே என்று அவன் அறிந்து அவன் வீட்டாரனைவரும் இயேசுவை விசுவாசித்தார்கள்.

பிரியமான தம்பி, தங்கைகளே! நீங்கள் இந்த மனுஷனைப் போல இயேசுவை விசுவாசித்ததுண்டா? மரண அவஸ்தையாயிருந்த அந்த மனிதனுடைய மகனை இயேசு சந்திக்கவும் இல்லை. அவனுக்கு என்ன வியாதி பிடித்திருக்கிறது என்று கேட்கவும் இல்லை. தம்மால் சுகமாக்க முடியும் என்று நம்பி வந்த மனுஷனைப் பார்த்து நீ போகலாம் உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா! டாக்டர்கள் பரிசோதித்து நோயை அறிவார்கள். சுகமாக இரண்டு மூன்று மாதமாவது ஆகும் என்பார்கள். ஆனால் இவரோ சொன்ன நிமிடத்தில் சுகமாக்குகிறவர் இப்பேர்ப்பட்ட அற்புதத்தை நமக்குத் தந்த தேவனை நன்றியோடு துதிப்போம்.

சார் ஒரு கேள்வி:- எப்படி இந்த மனுஷனுக்கு இப்படிப்பட்ட நம்பிக்கை வந்தது. தம்பி இயேசு செய்த முதலாம் அற்புதத்தை இவன் அந்த ஊரிலே கேள்விப்பட்டிருக்கக் கூடும். அத்தோடு எருசலேமின் பண்டிகையின் போது இயேசு செய்த எல்லாவற்றையும் கலிலேயர் பார்த்திருக்கிறார்கள். அதனால் இயேசுவை விசுவாசித்து தன் மகனை சுகமாக்கும்படியாக அவரை வேண்டிக் கொண்டான். நாமும் அவருடைய அற்புதங்களை வேதாகமத்தின் மூலம் தெரிந்து கொள்கிறோம். ஆகையால் நாமும் இந்த மனிதனைப் போலவே இயேசுவை நம்பி நம் வீட்டாரோடு சேர்ந்து விசுவாசிப்போம்.

## மனப்பாட வசனம்

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபிரெயர் 11 : 1)

## வேத அறிவுப்போட்டி எண் 34ல் வெற்றிபெற்றவர்கள்

1. A. ராபர்ட்கிளைவ் - சிலுவத்தூர்
2. K. பிரஜீதா - ஈரோடு
3. P. அலீஸ்மேரியம்மாள்- வத்தலக்குண்டு
4. S. ராஜபிரசாத் - மதுரை
5. Mrs. குளோரிபவுல்ஜர் - சென்னை
6. G. மெர்சிரூபி - கொடுவாய்
7. Mrs. P.S. லலிதாபிரேமகுமாரி - மதுரை
8. V. கோவலன்- மதுரை
9. IRA. எதிராசன் - சங்ககிரி
10. A. ரெபேக்காள்-நாகமலைபுதுக்கோட்டை
11. A. மேரியம்மாள் - மதுரை
12. S. செல்லமணிஆறுமுகம் -Y. ஒத்தக்கடை
13. J.S. நிர்மலாஜான் - மதுரை
14. A. சேவியர்மேரி - மதுரை
15. S. தண்டபாணி - சிலுவத்தூர்
16. P. டேவிட் - சென்னை
17. M. சௌதண்யா - பண்ணைப்புரம்
18. S.R. பெரியசாமி - சேளூர்
19. D. சிவகாமி - வீரணம்பாளையம்
20. Mrs. கிரேஸ்லூயிஸ் - நிலக்கோட்டை
21. P. கந்தசாமி -
22. A. தங்கமுத்து - பொங்கலூர்
23. S. சண்முகம் - அழகுமலை
24. R. வேலுச்சாமி - ஊதியூர்
25. P.M. சத்தியவாசகன் - சேலம்
26. M. ரோஸ்மேரி - சென்னை
27. D. ஆரோக்கியசாமி - கோவை
28. K.M. சுரேஷ் - கொடுவாய்
29. S. எஸ்தர்மெர்ஸி - வத்தலக்குண்டு
30. R. ஜெயந்த் மோசஸ் - கேத்தி
31. D.ஸ்டாலின்டுவின்கில் - செட்டிபாளையம்
32. P. காளியம்மாள் - செட்டிபாளையம்
33. V. சரவணகுமார் - கோவை
34. N. கஸ்தூரிகிறிஸ்டி - திருவண்ணாமலை
35. J. மரகதம்வினோத்குமார் - தூத்துக்குடி
36. D. சமாதானராஜா - செட்டிபாளையம்
37. N. ஜேம்ஸ் - செட்டிபாளையம்
38. G.P. ஏசையன்ராஜ் - கோபி
39. S. வைலட்சுந்தர் - வாடிப்பட்டி
40. S. காமாட்சி - சமத்துவபுரம்
41. K. சாந்தி - M.வாடிப்பட்டி
42. S. ஆனந்தராஜ் - ஈரோடு
43. Mrs. ஜெயந்திநோயல் - சேலம்
44. Mrs. ஜாஸ்மின் வின்சென்ட்ராஜ் - மதுரை

## நன்றி சொல்லுகிறோம்!

சென்ற மாத இதழில் வேத அறிவுப்போட்டியில் 6ம் கேள்வி தவறுதலாக அச்சிடப்பட்டதை சுட்டிக் காட்டிய வாசகர்களுக்கும் நன்றி சொல்லுகிறோம். அதை வாசகர்கள் சரி செய்து கொள்ளவும்.

– ஆசிரியர்

# ஊழியனே
# உன் ஊழியம் எப்படிப்பட்டது?

| | |
|---|---|
| ஒரே இடத்தில் உட்கார்ந்து கொண்டா? | அவர்... கிராமங்களிலே சுற்றித்திரிந்து உபதேசம் பண்ணினார். மாற்.6 : 6. |
| உறவினர் மத்தியில் மட்டுமா? | உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்து செய்கிறது என்ன? மத்.5:46. |
| கட்டிடத்தின் மேல் கட்டிடம் கட்டிக் கொண்டா? | மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடம் இல்லை. லூக்.9:58. |
| ஆகாயத்தில் பறந்து கொண்டா? | ஆகாயத்தில் ஏறி ஆழங்களில் இறங்குகிறார்கள் (சங்.107 : 26). |
| இரண்டு எஜமான்களுக்கா? | தேவனுக்கும் உலக பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது (மத். 6 : 24) |
| மற்றவர்களைக் குற்றப்படுத்திக் கொண்டா? | அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்திரவாதி (ரோ. 14 : 4). |

## வேத அறிவுப் போட்டி எண் 34ன் விடைகள்

1. வீணர் - ஏசா.44 : 9
2. நெகேமியா - நெகே. 5: 14
3. தேவநீதி - ரோ. 3: 21
4. பவுல் - 1 தீமோ. 1 : 13
5. வீட்டைப் பார்க்கிலும் - எபி. 3 : 3
6. எஸ்றா - எஸ்றா 8 : 21
7. யோசேப்பு - ஆதி. 45 : 7
8. அறிவில்லாதவர்கள்- ஏசா.45 : 20
9. நியாயப்பிரமாணத்தை- யாக். 4: 11
10. தேவனால் - 1யோ. 4 : 2

## ஜெபியுங்கள்

★ இம்மாதம் திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற விருக்கும் IIவது வாசகர் கருத்தரங்கிற்காக.

★ புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பெரியகுளம் கிறிஸ்துவின் சபை ஊழியத்திற்காக

★ தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழை தாங்குகிறவர்களுக்காக ....



கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக

# தமிழகத்தில் 2001 முதல் 2003 ஏப்ரல் முடிய கிறிஸ்துவின் வசன வாசகர் கருத்தரங்கு நடைபெற்ற மாவட்டங்கள்

| | |
|---|---|
| 1. **V. அந்தோணிசாமி**<br>கிறிஸ்துவின் சபை, செந்தூரன் நகர்,<br>சாரளுர், கோட்டார்,<br>நாகர்கோவில்-624 902.<br>***கன்னியாகுமரி மாவட்டம்.*** | 6. **L. மனாசேமன்னு**<br>கிறிஸ்துவின் சபை,<br>53/44, காளியம்மன்பட்டி,<br>பிச்சனூர், குடியாத்தம் - 632 602.<br>***வேலூர் மாவட்டம்.*** |
| 2. **Bro. தானியேல் துரைராஜ்**<br>கிறிஸ்துவின் சபை,<br>65, மார்ஷிங்பேட்டை மெயின் ரோடு,<br>பீமநகர், திருச்சி - 620 001.<br>***திருச்சி மாவட்டம்.*** | 7. **K. சேகர்**<br>கிறிஸ்துவின் சபை,<br>பவர் ஹவுஸ் எதிர்புறம்,<br>குமாரபாளையம் - 638 183.<br>***நாமக்கல் மாவட்டம்.*** |
| 3. **Bro. ஏசையன்**<br>கிறிஸ்துவின் சபை,<br>2, மணல்மேடு வீதி,<br>ஈரோடு - 1.<br>***ஈரோடு மாவட்டம்.*** | 8. **P. ஜார்ஜ் பெர்னான்டஸ்**<br>கிறிஸ்துவின் சபை, வேப்பிலைப்பட்டி,<br>கேத்து ரெட்டிபட்டி - 635 302.<br>பொம்மிடி வழி,<br>***தருமபுரி மாவட்டம்.*** |
| 4. **K. சாமுவேல்**<br>கிறிஸ்துவின் சபை, பல்லவன் நகர்<br>(ரயில் நிலையம் அருகில்)<br>திருவண்ணாமலை - 1.<br>***திருவண்ணாமலை மாவட்டம்.*** | 9. **Bro. டேவிட்**<br>கிறிஸ்துவின் சபை<br>பரி.அந்தோணி மெட்ரிக்குலேசன் பள்ளி<br>நாராயண பிள்ளை தெரு, பெரமனூர்,<br>சேலம் - 9. ***சேலம் மாவட்டம்.*** |
| 5. **K.P. தங்கராஜ்**<br>கிறிஸ்துவின் சபை<br>பிரீச் ஹோம், 39 D/4, பாரி கம்பெனி ரோடு,<br>காட்டூர், மேட்டுப்பாளையம் - 641 305.<br>***கோவை மாவட்டம்.*** | 10. **P. வினோத் குமார்**<br>கிறிஸ்துவின் சபை<br>51/ 5A, முனியசாமி புரம்,<br>தூத்துக்குடி - 3.<br>***தூத்துக்குடி மாவட்டம்.*** |



மேற்கண்ட இடங்களில் கிறிஸ்துவின் சபையார் கூடி தேவனை ஆராதிக்கிறார்கள். இம்மாவட்டங்களில் நீங்கள் இருக்க நேர்ந்தால் இவர்களோடு சேர்ந்து தேவனை ஆராதியுங்கள். சிலர் இடம் மாறி இருக்கக்கூடும். விசாரித்து விபரம் அறிந்து கொள்ளுங்கள். **இடம் மாற்றம் செய்த சகோதரர்கள் தயவு செய்து உடன் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.**

தமிழகத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களிலும் கருத்தரங்கு நடைபெறும். கருத்தரங்கு நடத்த விருப்பமுள்ள ஏனைய மாவட்ட ஊழியர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளவும். நன்றி.

*ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!*

***பொருள்*** : மனந்திரும்புதல்

***ஆக்கியோன்*** : ஏரேமியா

***காலம்*** : ஏறக்குறைய 627 - 575 கி.மு.

***திட்டவரைக் குறிப்பு :***

- ★ ஏரேமியாவின் முக்கிய கவனம் கர்த்தரோடுள்ள யூதாவின் அன்பின் உடன்படிக்கை உறவிலிருந்த தொய்வின் மேலும் கர்த்தருடைய புதிய உடன்படிக்கையைக் குறித்த வாக்குத்தத்தின் மேலிருக்கிறது. தேவன் ஒரு தீர்க்கதரிசியை அழைக்கிறார் (அதி. 1) ;
- ★ கர்த்தர் தம்முடைய ஜனங்களின் அவிசுவாசத்தைக் கடிந்து கொள்கிறார் (2-6) ;
- ★ கர்த்தர் தேசத்தின் பாரம்பரியக் கோட்பாடுகளையும் பாதுகாவலையும் எதிர்க்கிறார் (7:1 - 11:7) ;
- ★ கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியின் முறையீடுகளுக்கு செவிசாய்க்கிறார் (11 : 18 - 20 : 18);
- ★ கர்த்தர் அவிசுவாசமுள்ள தலைவர்களை எச்சரிக்கிறார் (21 : 1 - 29 : 32) ;
- ★ கர்த்தர் ஜனங்கள் அடிமையாக கொண்டு செல்லப்பட்ட பின் திரும்ப அழைத்துக கொள்வதாகவும் புதிய உடன் படிக்கையை தருவதாகவும் வாக்களிக்கிறார் (30 - 33) ;
- ★ கர்த்தர் துன்புறுத்தப்பட்ட தம்முடைய தீர்க்கதரிசியை காப்பாற்றி நிலைநிறுத்துகிறார் (34 : 1 - 40 : 6) ;
- ★ கர்த்தர் அவிசுவாசிகளை மறுபடியும் எச்சரிக்கிறார் (40 : 7 - 45 : 5) ;
- ★ கர்த்தர் அநீதியுள்ள தேசங்களை நியாயந்தீர்க்கிறார் (46-51)
- ★ அவிசுவாசம் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அழிவைக் கொண்டு வருகிறது (52) ;

***சிறப்புச் செய்தி :***

எருசலேமே நீ இரட்சிக்கும்படிக்கு உன் இருதயத்தைப் பொல்லாப்பறக் கழுவு ; எந்த மட்டும் அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்திலே தங்கும்.

***வரலாற்று பின்னணி :***

தேவனுக்கு விரோதமாக செயல்பட்டு அவரை விட்டு விலகின யூதா, மீண்டும் மனந்திரும்பி அவரிடம் திரும்புவதற்காக. வரவிருக்கிற நியாயத் தீர்ப்பைக் குறித்து யூதாவை எச்சரித்தல்.

# வேத அறிவுப் போட்டி எண். 35

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

**கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பி வைக்க வேண்டும். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.**

Ref.No., உங்கள் பெயர், ஊர் மற்றும் தெளிவான முகவரியுடன் எழுதி அனுப்பவும்.

1. பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல ; மனம் மாற அவர் யாரும் அல்ல?
2. கீழ்மக்கள் மாயையும், மேன்மக்கள் பொய்யுமாமே; தராசிலே வைக்கப்பட்டால் அவர்களெல்லாரும் எதிலும் லேசானவர்கள்?
3. துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் எதிலே வெற்றி சிறந்தார்?
4. அக்கிரமக்காரனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே என்ன பண்ணுவார்?
5. ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் எது நிறைந்தவனுமாயிருக்கிறான்?
6. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு எவ்வகையான பலமுள்ளவைகளாயிருக்கிறது?
7. நாம் தேவனுடனே போர் செய்வது தகாது என்று வாதாடினவர்கள் யார்?
8. வானத்தையும், பூமியையும் உண்டாக்காத தெய்வங்கள், பூமியிலும் இந்த வானத்தின் கீழும் இராதபடிக்கு என்னவாகும்?
9. ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்; அவர் என் கால்களை எவைகளைப் போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவார்?
10. அவனவன் எதைச் சோதித்துப் பார்க்கக் கடவன்?

# நடப்புச் செய்திகள்

★ ராமேஸ்வரம் - மதுரை அகல ரயில்பாதை திட்டத்தில் தேக்கம்.

★ மதிய உணவுத் திட்டத்தை அனைத்து மாநிலங்களும் அமல்படுத்த வேண்டும் என்று குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் கேட்டுக் கொண்டார்.

★ ஜனநாயகத்துக்கு பத்திரிக்கைகளும் மிக முக்கியமான ஒரு தூண். அதன் நம்பிக்கை தன்மை மிகவும் முக்கியமானது என்று துணைப் பிரதமர் அத்வானி கூறியுள்ளார்.


★ அமெரிக்கா, பிரிட்டனின் சீரமைப்புப் பணிகளுக்கு உதவ 12 நாடுகளைச் சேர்ந்த 30 ஆயிரம் ராணுவ வீரர்கள் விரைவில் ஈராக் செல்ல உள்ளனர்.

★ இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ராபர்ட்கார்சைட் ஓடியே உலகைச் சுற்றி வந்து சாதனை படைத்துள்ளார்.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. Editor : B. Arjunan.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday Thursday | 6.45 a.m 7.00 a.m | Box. 3815 New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon Wed,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80 Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Mon, Tue, Wed, Thu, Fri | 5.30 p.m 5.45 p.m | Box. 8405 Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m 4.00 p.m | Box. 5540 Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th July 2003.

**Monthly Magazine** **FOR FREE DISTRIBUTION ONLY**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.